JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **25/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | **Govindaraj** | Caste | |
| Father's Name | **Periyanna chettiyar** | Calling | |
| Village | **Mamarathupalayam** | Religion | |
| Taluk | **Erode** | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 29.04.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு எண்ணெய் வியாபாரம் செய்து வருகிறேன். 05.03.2016 ம் தேதி இரவு 8.45 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்த போது போன் மூலம் என்னுடைய அண்ணன் மகன் மேகநாதன் இருசக்கர வாகனத்தில் சென்ற போது இரவு 8.00 மணி சுமாருக்கு வாவிக் கடை பெட்ரோல் பங்க் அருகே வெள்ளை நிற செவரலெட் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். அந்த விபத்தில் மேகநாதனுக்கு தலையில் பலத்த காயம் பட்டு வாயிலும், காதிலும், மூக்கிலும் இரத்தம் வந்ததால் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து ஈரோடு அரசு மருததுவமனைக்கு சிகிச்சையில் சேர்த்திருப்பதாக சொன்னதின் பேரில் நான் ஈரோடு அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது தலையிலும், காதிலும், மூக்கிலும் அடிபட்டு பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். அதன் பின்னர் 9.50 மணியளவில் இறந்து போய் விட்டதாக மருத்துவர்கள் கூறியதால் மறுநாள் காலையில் நான் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று எழுத்து மூலமான புகாரைக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வந்து ஈரோடு அரசு மருத்துவமனையில் சவக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த

மேகநாதனின் சவத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார். நான் மேகநாதனை அடையாளம் காட்டினேன். நான் எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சங்கதிகளை நான் தான் எழுதினேன். நான் போலீசார் சொல்லி எழுதினேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து போலீசார் எங்களுக்கு தகவல் தெரிவித்து நான் தமிழ்மணி மற்றும் முனியப்பன் ஆகியோர் மருத்துவமனை சென்று பார்த்தோம்.

2. அ.சா.ஆ. 1 புகாரில் உள்ள திருத்தங்கள் போலீசார் சொல்லி நான் திருத்தி எழுதிக் கொடுத்தேனா என்றால் ஆமாம். மறுநாள் காவல் நிலையம் சென்று என்னை விசாரித்து கையெழுதது வாங்கிக் கொண்டார்கள். தமிழ்மணி மற்றும் முனியப்பன் ஆகியோரிடமும் போலீசார் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். விபத்து குறித்து போலீசார் தகவல் சொல்லும் போது நான் வீட்டில் இருந்தேன். அதே போல் தமிழ்மணி மற்றும் முனியப்பன் ஆகியோர்களும் வீட்டில் இருந்திருப்பார்களா என்றால் அவரவர் வீட்டில் இருந்திருப்பார்கள். தமிழ்மணி மற்றும் முனியப்பன் ஆகியோர்களுக்கு விபத்து குறித்து நான் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. போலீசார் தகவல் சொன்னார்கள். காவல் நிலையம் சென்ற போது விபத்து ஏற்படுத்திய காரை பார்த்தேன்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).